**ஹொரண பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**
---------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 16 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஒக்டோபர் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹொரண களுத்துறை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

(அ) இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல. 1 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகையில் ஐந்தொகையில் மீளவாண்டினதும் முன்னைய ஆண்டினதும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல. 2 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சற்கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக காசுப்பாய்ச்சற் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கான எனது அறிக்கையில் 2.2.2 (இ) ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டிருந்த தவறைச் சீராக்குவதற்காக ஊழியர் கடன் கணக்கு வரவு வைக்கப்பட்டு முற்பணக் கணக்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக முற்பணக் கணக்கு ரூபா 246,967 தொகையால் வரவு வைக்கப்பட்டு அப் பெறுமதி ஊழியர் கடன் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் ஊழியர் கடன் கணக்கு மீதி ரூபா 493,934 தொகையால் குறைவாகவும் முற்பணக் கணக்கின் மீதி அப் பெறுமதியால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் மக்கள் வங்கி நிலையான வைப்பிற்காகக் கிடைக்கப்பெற்ற வட்டித் தொகையான ரூபா 843,217 தொகை முதலீட்டுக் கணக்கு வரவு வைக்கப்பட்டு வட்டி வருமானம் செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக மூலதனப் பயன்பாட்டிற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கப்படும் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) பேரேட்டுக் கணக்குகளின் படி நிலையான வைப்பு முதலீட்டுக் கணக்கு மீதி ரூபா 18,142,099 தொகையான போதிலும் ஐந்தொகைக்கு அம் மீதி ரூபா 17,298,882 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) உள்ளூராட்சித் திணைக்களத்தால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,178,457 பெறுமதியான கப் வாகனக் கடன் மீதி கணக்கீடு செய்யப்பட்டிராததுடன் இதற்குப் பதிலாக சம்பள மீளளிப்பிலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 706,273 தொகையான கடன் தவணைப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் கிராம எழுச்சிச் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த கைத்தொழில்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 75,328,000 தொகைக்கும், குறித்த பணிக்கான செயற்திட்டத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 60,869 தொகைக்கும் மாகாண குறித்த செயற்திட்டத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 298,991 தொகைக்குமாக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததுடன் கைத்தொழில் செலவினமாக வருமானச் செலவினக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கிராம எழுச்சிச் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்திற்காகக் கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 75,328,000 தொகை கைத்தொழில் கடன்பட்டோர் கணக்கிலும் மூலதன மானியக் கணக்கிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) இங்கிரிய பொது நூலகத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 26,800 தொகையான 02 கொங்கிரீட் மேசைகள் மற்றும் கதிரைத் தொகுதிகளும், 02 கொங்கிரீட் வாங்கில்களும் ரூபா 310,500 தொகையான 09 தனிப்பக்க அலுமாரிகளும், 20 சிறுவர் கதிரைகளும் இங்கிரிய உப அலுவலகத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 37,360 தொகையான அலுவலக உபகரணங்களும் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வருமானப் பேரேட்டுக் கணக்கின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையான வருமான மீதி ரூபா 37,097,261 தொகையான போதிலும் பரீட்சை மீதியில் ரூபா 37,049,170 தொகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 8,747,725 தொகையான பற்றாக்குறை திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டிற்குரித்தாக நீதிமன்றத் தண்டப்பணத்திலிருந்தான பெறுவனவுகளான ரூபா 1,401,579 தொகையும் 2013 ஆம் ஆண்டிற்குரித்தான நிலுவைத் தொகை ரூபா 8,400,000 ஆனமையால் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 9,801,579 தொகையாக வேண்டிய

போதிலும் வருமானச் செலவினக் கணக்கிற்குப் பட்டியலிடப்பட்ட வருமானமாக ரூபா 8,400,000 மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டணப் பெறுவனவான ரூபா 55,576,276 தொகையில் முன்னைய ஆண்டிற்குரித்தான பெறுவனவுகள் ரூபா 52,405,612 தொகையானமையால் மீளாய்வாண்டிற்குரித்தான ரூபா 3,270,664 தொகையும் பெறவேண்டிய பெறுமதி ரூபா 25,641,025 தொகையானமையால் முத்திரைக் கட்டணம் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 28,911,689 தொகையான போதிலும் வருமானச் செலவினக் கணக்கிற்கு ரூபா 25,641,025 எனப் பதியப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் நிலுவையாகக் காணப்பட்ட ஏனைய வருமானக் கணக்கில் முத்திரைக் கட்டணத்திற்கும் நீதிமன்றத் தண்டப்பணத்திற்கும் உரித்தான ஆரம்ப மீதியாக ரூபா 35,803,601 தொகையும் ஏனைய வருமானத்திற்குரித்தான நிலுவை ஆரம்ப மீதியாக ரூபா 2,588,777 தொகையும் காணப்பட்ட போதிலும் காசுப் பெறுவனவின் படி, முன்னைய ஆண்டிற்குரித்தான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணமாக முறையே ரூபா 52,405,612 தொகையும் ரூபா 3,436,842 தொகையும் (ரூபா.55,842,454) தொகையானமையால் ஆரம்ப மீதியில் குறைவான ஏற்பாடு ரூபா 20,038,853 தொகையான நிலுவையான ஏனைய வருமானக் கணக்கு வரவு வைக்கப்பட்டு குறித்த வருமான விடயத்திற்கு செலவு வைக்கப்பட்டிராமையால் ஆண்டின் இறுதியிலான நிலுவை வருமானக் கணக்கு மீதியும் திரண்ட நிதிக் கணக்கு மீதியும் ரூபா 20,038,853 தொகையால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(க) மீளாய்வாணண்டின் நானாவித வைப்புக் கணக்கின் செலவுப் பக்கத்தின் கூட்டுத்தொகை ரூபா 5,608,219 தொகையாகவும் வரவுப் பக்கத்தின் கூட்டுத்தொகை ரூபா 2,214,443 தொகையாகவும் காணப்பட்டமையால் மீதி ரூபா3,393,776 தொகையான போதிலும் பரீட்சை மீதியில் அம் மீதி ரூபா 3,489,957 ஆகப் பதிவுசெய்யப்பட்டிருந்தமையால் ரூபா 96,181 தொகையால் செலவுப் பக்கம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) மீளாய்வாண்டின் படிப்பணமான ரூபா 1,458,000 பட்டியற்படுத்தலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 20,980,808 தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 8,558,869 ஆக இருந்ததுடன் அதற்கு மாறாக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,725,348 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 13,652 | 1,066 | 15,553 |
| (ii) | வாடகை | 1,983 | 1,631 | 2,327 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 844 | 841 | 3 |
| (iv) | ஏனைய வருமானம் | 823 | 823 | -- |

**2.2.2 வீதவரி**

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 6,409,806 தொகையான நிலுவையான வீதவரி மீதியில் ரூபா 2,256,925 தொகை 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) போருவதன்ட உப அலுவலகத்திற்குரித்தான முதலீட்டு வலயமாகக் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து 2008 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 8,411,805 தொகையான வீத வரி மீதி கணக்காய்வுத் தினமாகிய 2014 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏக்கர் வரி**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 449,736 தொகையான ஏக்கர் வரி மீதி கணக்காய்வுத் தினமாகிய 2014 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கடை வாடகை**

இங்கிரிய உப அலுவலகத்தின் புதிய விற்பனைத் தொகுதியிலும் பொதுச் சந்தைக் கடைகளிலிருந்து ரூபா 116,000 தொகையான நிலுவை வாடகை மீதி 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.5 காணி விற்பனையிலான வரி**

(அ) 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த காணி விற்பனையில் 1 சதவீத வரியாக ரூபா 1,618,682 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் அத் தொகை மதிப்பிடப்பட்ட தொகையில் 1 சதவீதமானதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 154(1) இன் பிரகாரம் காணி விற்பனைப் பெறுமதியில் 1 சதவீதத்தை அறவிடப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹோம்லான்டிங் ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட காணி ஏலவிற்பனைக்காக கும்புக்க கஹட்டகஹவத்த காணியின் கூறாக்கல் திட்டம் 2013 நவம்பர் 25 ஆம் திகதி சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2014 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் இதற்குரித்தான 1 சதவீத வரித்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முற்பணக் கொடுப்பனவு

முற்பணப் பதிவேட்டின் படி, 2008, 2009 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 8,119 தொகையான முற்பணம் இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371 (ஆ) இன் பிரகாரம் கணக்காய்வுத் தினமாகிய 2014 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய முற்பண மீதி ரூபா 4,184,991 ஆகக் காணப்பட்டது.

### 3.2 பொருள் மெய்மையாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளுக்காக 2014 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரையிலும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் பொருள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்த பொருட்கள், கனன்வில மற்றும் பொகுணுவிட்ட உப அலுவலகங்களின் பொருட் பதிவேடுகளில் 2014 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 132 ''ஏ'' பிரிவின் பிரகாரம் அமைச்சரின் எந்தவித அங்கீகாரமும் பெறப்படாதும் ஒரு வருடத்திற்கு ஆயிரம் ரூபா உச்ச எல்லை பின்பற்றப்படாது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக பொருள் மானியங்கள் வழங்கப்படுவதற்கும் மக்கள் சபைகளுக்காக பொருள் மானியங்களை வழங்கியமைக்காக ரூபா 2,510,339 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டவாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது பின்வரும் செலவினங்களும் 2013 ஆம் ஆண்டின் சபை நிதியத்திலிருந்து ஏற்கப்பட்டிருந்தது.

(i) பாலூட்டும் தாய்மார்களின் நாளைக் கொண்டாடுவதற்கான பிரசார நடவடிக்கைகளுக்காக பதாதைகளை அச்சிடுவதற்காக ரூபா 17,600 தொகை ஹங்சி அட்வடைசிங் நிறுவகத்திற்கு 2013 நவம்பர் 05 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(ii) இங்கிரிய இளைஞர் பௌத்த கழகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட எசல வளாகத்தின் மின் ஒளிரூட்டலை வழங்குவதற்காக

செலவிடப்படும் பணமாக ரூபா 20,000 தொகை அக் கழகத்திற்கு மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(iii) இங்கிரிய மக்கட் சபையால் நடாத்தப்பட்ட தீபாவளி வைபவத்திற்கு அனுசரணை அளிக்குமுகமாக ரூபா 30,000 தொகை அம் மக்கட் சபைக்கு 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 வாகனக் கட்டுப்பாடு**

-----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 24 வாகனங்கள் சபையில் காணப்பட்ட போதிலும் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 1647(உ) இன் பிரகாரமும் நி.பி. (ii) தொகுதி VI ஆம் பட்டோலையில் காண்பிக்கப்பட்ட விதப்புரைகளின் படி வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையின் எந்த வாகனத்திற்கும் உரித்தான மாதாந்தப் பொழிப்பும் தயாரிக்கப்பட்டிராததுடன் ஓட்ட அட்டவணைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் இல 41 – 90 இன் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு தொடர்பாக 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2014 ஆகஸ்ட் 28 ஆம் திகதி சபையின் 07 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் வாகனங்களின் மீட்டர்களும் பௌதீக மெய்மையாய்விற்கு உட்படுத்தப்படுகையில் அச் சகல வாகனங்களினதும் மீட்டர் செயலிழந்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மேலதிக ஆய்வின் போது அம் மீட்டர் பல ஆண்டுகளுக்கு முன்னர் உடைந்திருந்த போதிலும் அவற்றை மீளப் பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மோட்டர் கிரேடருக்குரித்தான ஓட்ட அட்டவணைகளின் படி, வாகனம் வீதிப் பதனீட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த எவ்வித செயற்பாடுகளுக்காகவும் எதிர்கால நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு இல்லாதிருந்ததுடன் தலைவரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

-------------------------------------------

2013 திசெம்பர் 30 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 166 ஆனதுடன் நிரந்தரப் பதவியணி 152 ஆகக் காணப்பட்டது. தற்காலிக அடிப்படையில் 19 பேரும் செயற்திட்ட பதவியணியாக 37 ஊழியர்களும் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 09 பதவியில் 12 ஊழியர்களின் பற்றாக்குறை காணப்பட்டது.

**3.6 போக்குவரத்துச் செலவினம்**

2013 ஆம் ஆண்டின் சனவரி முதல் திசெம்பர் வரை தலைவரால் போக்குவரத்துச் செலவின உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்டு 247 நாட்களுக்காக இணைந்த படிப்பணமாக ரூபா 123,500 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தலைவரால் ஏதேனும் போக்குவரத்துச் செலவினமோ அல்லது இணைந்த படிப்பணமோ பெற்றுக்கொள்ளப்படுகையில் அப் பயணத்திற்குரித்தான செயற்பாடுகள் ஏதேனும் தீர்மானத்தின் மூலம் தலைவருக்கு ஒப்படைக்கப்பட்ட செயற்பாடாக அல்லது தலைவரின் நிர்வாகச் செயற்பாட்டிற்குரிய பயணமாக அல்லது ஏதேனும் நிறுவகத்தின் மூலம் தலைவர் அழைக்கப்பட்ட சந்தர்ப்பமாக உறுதிப்படுத்தும் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய எவ்வித சான்றும் சமர்ப்பிக்கப்படாது மேற்குறித்த இணைந்த படிப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) அப் பயணச் செலவினம் உறுதிச்சீட்டு தொடர்பான மேலதிக பரிசோதனையின் போது 2013 சனவரி முதல் திசெம்பர் வரை நடாத்தப்பட்ட 12 பொதுக் கூட்டத்தினங்களில் 11 நாட்களுக்காகவும் தலைவர் கூட்டத்தில் கலந்துகொண்டு படிப்பணத்தைப் பெற்றுக்கொண்டிருந்ததுடன் மேற்குறித்த போக்குவரத்துச் செலவின உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த இணைந்த படிகளில் அத் தினங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(iii) மீளாய்வாண்டிற்காக நிதிக் குழுக்களும் கைத்தொழில் குழுக்களுக்காக 2013 ஆம் ஆண்டின் போது 13 நாட்களும் கூடப்பட்டிருந்ததுடன் அந்த ஒவ்வொரு நாளிலும் தலைவர் கலந்து கொண்டு மேற்குறித்த போக்குவரத்துச் செலவினத்தில் அந் நாட்களுக்காகவும் இணைந்த படிப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) இவ்வாறே 2013 ஆம் ஆண்டின் போது 76 நாட்கள் நடாத்தப்பட்டிருந்த திட்டக் குழுக்களுக்காக தலைவர் கலந்து கொண்டு குறித்த படிப்பணத்தைப் பெற்றுக்கொண்டிருந்ததுடன் அந் நாட்களுக்காகவும் இணைந்த படிப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(v) மீளாய்வாண்டின் போது போக்குவரத்துச் செலவினத்திற்காக வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 316,000 தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது போதாமையால் 2013 ஒக்டோபர் 22 ஆம் திகதிய குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 100,000 தொகையான ஏற்பாடும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**3.7 பதவியணியினர் கடன்**

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் கடன் மீதியில் 2011 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் சேவையை விட்டுச் சென்ற 14 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 111,461 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு 2014 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஆதனக் கடனுக்காக 2013 ஆம் ஆண்டின் போது சபையால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 178,369 தொகையான வட்டித் தொகை மாகாணத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2014 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) மனித வள முகாமைத்துவம்